## 117. கொல்கதாவின் பாதையில் கடந்து

### பல்லவி

கொல்கதாவின் பாதையில் கடந்து சென்றேன்
கனிவான இன்முகத்தை பார்த்து நின்றேன்
இரத்தத்தினால் நனைத்த உருவத்தை காண்டேன்
அந்தஇரத்தமே என்னை கழுவியதை உணர்ந்தேன்

### சரணங்கள்

1. பாவிகள் நடுவில் பாதகன் போல்
தொங்கினவரின் சத்தத்தை கேட்டேன்
பிதாவே இவர்களை மன்னியும் என்றார்
எனது உள்ளத்தை உருக்கிவிட்டார்
- கொல்கதா பாதையில்

2. சிலுவையில் தொங்கின கள்ளனுக்கு
பாவ உணர்வை அடைய செய்தார்
இன்றைக்கு என்னுடன் பரதீசியில்
இருப்பாய் என்று வாக்குரைத்தார்
- கொல்கதா பாதையில்

3. மகனைப் பிரிந்து வாடும் தாயிக்கு
அதோ உன் மகன் என்றிணைத்தார்
தாயை பிரிந்து வாடும் மகனுக்கு
அதோ உன் தாய் என்றிணைத்தார்
- கொல்கதா பாதையில்